DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.05/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | சாரால் | Age | : | 39 |
| W/o | : | சுரேஷ் | Occupation | : | தலைமைக்காவலர், அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 09th day of October 2023.

**09.10.2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). கடந்த 29.06.2019 ம் தேதி 19.00 மணியை போல நான், தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் சார்பு ஆய்வாளர் சசிகலா ஆகியோர் பேரையூர் அரசு மருத்துவமனை எதிரே சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக வந்த TVS XL இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது அதில் இரண்டு சிப்பம் ரேசன் புழுங்கல் அரிசி இருந்தது. அந்த வண்டியை ஆஜர் எதிரி ஓட்டி வந்தார். அவரிடம் ரேசன் புழுங்கல் அரிசி வைத்திருக்க எந்த ஒரு ஆவணமும் இல்லாததால் அவரை சார்பு ஆய்வாளர் கைது செய்து விசாரித்தார். அப்போது ஆஜர் எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் என் முன்னிலையிலும், பாலசுப்பிரமணியன் என்பவர் முன்னிலையிலும் பதிவு செய்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைது தான். (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. அதன் பின்னர் சார்பு ஆய்வாளர் அத்தாட்சி மூலம் மேற்படி அரிசியை கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், பாலசுப்பிரமணியன் என்பவரும் கையெழுத்து செய்தோம். அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைது தான். (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதன் பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பேரையூர் பீட்டர்புரத்தில் உள்ள ஆஜர் எதிரியின் வீட்டில் இருந்து 18 சிப்பம் ரேசன் புழுங்கல் அரிசியை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைது தான். (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.8 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் கைப்பற்றிய 1000 கிலோ அரிசியை கமுதி குடோனில் ஒப்படைத்து ரசீது பெற்று வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ இடமானது எங்கள் காவல் நிலையத்தில் இருந்து எத்தனை கி.மீ தொலைவில் உள்ளது என்றால் 55 கி.மீ தொலைவில் உள்ளது. நாங்கள் எத்தனை மணிக்கு எங்கள் காவல் நிலையத்திலிருந்து ரோந்திற்கு புறப்பட்டோம் என்றால் காலை 10.00 மணிக்கு புறப்பட்டோம். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அன்றைய தினம் நாங்கள் எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தோம் என்றால் 4, 5 வாகனங்களை தணிக்கை செய்தோம். சம்பவ இடத்திற்கு அருகே அரசு மருத்துவமனை, அரசு மாணவர் விடுதி, பள்ளிக்கூடம் ஆகியவை உள்ளன என்றால் சரியாக ஞாபகம் இல்லை. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடம் என்றால் சரிதான்.

2. நாங்கள் கைப்பற்றிய அரிசி பிளாஸ்டிக் பைகளில் தான் இருந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் வீட்டருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் வீட்டருகே உள்ள நபர்களை சார்பு ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட அரிசிகளை தனியார் வாகனம் மூலம் குடோனிற்கு அனுப்பி வைத்தோம். எத்தனை மணிக்கு நாங்கள் குடோனிற்கு சென்றோம் என்றால் இரவு 08.00 மணிக்கு சென்றோம். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், என் முன்னிலையில் அரிசி எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், உயர்அதிகாரிகள் கேட்டு கொண்டதிற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் முன்னிலையில் ஆஜர் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**